98

சபரியின் பிரேமை

தண்டகாரண்யத்தில் மதங்கரிஷி ஆசிரமத்தில் சூரிய அஸ்தமனத்திற்கு சற்று முன்பே இருள் கவிந்துவிட்டது. அதைச் சுற்றியிருந்த மரங்கள் அவ்வளவு அடர்ந்தும் ஓங்கியும் வளர்ந்திருந்தன. அவற்றில் இரவிற்கு அடையும் பட்சிகளின் பலவிதமான கூக்குரல்கள் கொஞ்சங் கொஞ்ச மாக அடங்கிக்கொண்டிருந்தன. அந்த ஆசிரம பிரதேசத்தில் உயிரின் சின்னமே அப்பொழுது அடங்குவதுபோல் இருந்தது.

உள்ளே அங்கணத்தில் மதங்கர் தர்ப்பைப் படுக்கையில் ஒருவிதமான ஏக்கத்துடன் படுத்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் சிஷ்யர்கள் கவலை யுடன் உட்கார்ந்திருந்தார்கள்.

'குழந்தைகளே, இவ்வளவு சீக்கிரத்தில் எனக்கு சித்தி ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, என்னுடைய ஜீவன், இன்னும் சில வருஷங்கள் இந்தச் சடலத்திலிருந்து யோக சாதனையால் புனிதமாகிய இந்திரியங்கள் மூலம் மாயையகன்ற பூரணமான மூலப்பிரகிருதியை அனுபவிக்கும் என்று எண்ணியிருந்தேன்; ஆனால் என்னுடைய கடுமை யான நியமத்தால் தீபோல விளங்கப்பெற்ற என் இந்திரியங்களை நிர்வகிக்கும் சக்தி இந்த உடலுக்குப் போதவில்லை. ஆகையால் அதை அவை தகித்து சிதிலமாக்கி விட்டன. இனிமேல் நான் இந்த தேகத்தை விட்டுவிட வேண்டியதுதான்!'

மதங்கரிஷி இவ்வாறு மிருதுவான குரலில் சற்று ஏக்கம் தோய்ந்தபடி பேசினார்.

'மகரிஷே, இந்த உடலை சாசுவதமாக்கலாம் என்று நீங்கள் சொன்னீர்களே!'

'ஆமாம், செய்யலாம்; சாசுவதமாவதற்கு அந்த உடலில் பூர்வ சம்ஸ்காரத்தால் – அதாவது பிதுருக்களின் வீரிய பலத்தால் அழிவின் மைக்கு ஆதாரமான நாடி பலம் வேண்டாமா? அது என் உடலில் இல்லை என்று தெரிகிறது. என் மட்டில் நான் கடுமையான நியமமூலம் ஊர்த்துவரேதாயனானேன், சற்றும் தளராது பிரமசரியத்தால் ஒரளவு

கிராம ஊழியன், 01.02.1944

கட்டு கொண்டதாகச் செய்தேன். பலாத்காரமாக நான் உள்ளே அடக்கி நிறுத்தின தேஜஸ் உடலைச் சுட்டெரித்து விட்டது.'

'இப்பொழுது உங்களுடைய உத்தரவு என்ன?'

'இன்று இந்த சந்தியா காலத்துடன் இந்தக் காயமும் செயலற்றுப் போகும். இப்பொழுது நீங்கள் போய் சபரியை இங்கே வரச் சொல்லுங்கள். அவளுக்கு நான் அந்தரங்கமாகச் சொல்லவேண்டிய வார்த்தைகள் சில இருக்கின்றன.'

சிஷ்யர்கள் வெளியே போய் அங்கே ஆசிரமத்தின் பக்கத்தில் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்த சபரியைக் கூப்பிட்டு ரிஷியிடம் அனுப்பினார்கள்.

சபரி உள் அங்கணத்தில் நுழையாமலேயே, 'பிரபோ, என்ன உத்தரவு?' என்றாள்.

'சபரி வா, என் அருகில் வா!'

சபரி ஆச்சரியத்துடனும், தயக்கத்துடனும், மெதுவாக உள்ளே நுழைந்தாள்.

'சரி, இங்கே என் பக்கத்தில் உட்கார். இப்பொழுது நான் இந்த சரீரத்தை உதறும் தருவாயில் இருக்கிறேன்.என் பஞ்ச பிராணன்களும் இதில் நிலை கொள்ள இயலாமல் வெளியேற முயல்கின்றன. இந்த சமயத்தில் உன்னை நான் அந்தப் பிராண சக்தியின் அம்சமாக ஏற்க விரும்புகிறேன்.'

'பிரபோ, பேதைக்கு ஒன்றும் விளங்கவில்லையே!'

'விளங்கும். இதோ! இருபது வருஷங்களுக்கு முன்பு நீ யௌவன வேட்டுவப் பெண்ணாக இங்கே வந்து எனக்குச் சேவை செய்ய ஆரம்பித்தாய். உன் இளம் உள்ளத்தில் என்ன எழுச்சி இருந்துகொண்டு உன்னை அப்படிச் செய்யத் தூண்டியதோ-நான் அப்பொழுது அறிய இஷ்டப் படவில்லை. நான் காயத்தை கல்ப சதத்துக்கும் நீடிக்குமாறு செய்ய முயன்று கொண்டிருந்தேன்.'

'ரிஷிகுமாரரான தாங்கள் அப்பொழுது பாலசூரியன் போல நடமாடினீர்கள். அந்த தேஜஸ் விட்டிலைக் கவர்வது போல என்னையும் கவர்ந்தது-அதுதான் எனக்குத் தெரியும்.'

'அதாவது என் தேஜஸுடன் ஐக்கியமாக எண்ணினாய். ஆனால் மூடின தீப சிகையைப்போல் நான் உன்னை அண்ட விடவில்லை.'

'அதைச் சுற்றி அலைந்து வாழ்வதே போதுமென்று நான் காலங் கழித்தேன்.'

'நானும் ஆட்சேபிக்கவில்லை. யாரோ ஏதோ சொன்னார்கள். என் பலம் எனக்குத் தெரியும். ஆகையால் நீ அருகில் இருந்தாலும் என்னை நெருங்க முடியாது என்று சும்மா இருந்துவிட்டேன்.'

'தீபசிகையே ஒரு சமயம் திடீரென்று திரையை எரித்துக்கொண்டு

என்னை வலிய இழுக்கும் என்றுகூட நான் சில சமயங்களில் நினைத்த துண்டு!'

'அவ்விதம் தான் உன் அருகாமை பல சமயங்களில் என்னைப் பாதித்தது. ஆனால்–'

'அந்த சமயங்களில் நானே பலாத்காரமாக விலகிப் போய் சஞ்சரித்தேன்.'

'இரண்டு ஜீவன்களுக்கு இருபது வருஷங்களில் என்ன சோதனை!'

'என்ன வேதனையும் கூட!'

'அதன் இறுதி இன்று–இப்பொழுது! சபரி, மதமேறிய செவ்வரி படர்ந்த கண்களுடனும், பூமி ரசம் பரிபூரணமாக நிறைந்து இளம் மரக் கொம்புகள் போன்ற அங்கங்களுடனும் நீ இந்த ஆசிரம வாயிலுக்கு வந்தாய்!'

'நீங்களும் அப்பொழுது துவளாத் தன்மையும், மிருதுவான கடினமும் மணமும் கொண்ட சந்தனமரம் போல, ஆ, நினைவின் வலிமைதான் என்ன! என் முன் நிற்கிறது அந்த யௌவன அக்கினி ஜ்வாலை!'

'நான் வரட்டு காயகல்பத்தால் ஒடுக்கிய செழுமையை நீ ஓயாத பணிமூலம் ஒடுக்கிவிட்டாய். சரி. நீதான் என்னைக்காட்டிலும் அதிக மான வலிமை படைத்தவள்–'

'ஆனால் இதெல்லாம் ஏன் இப்பொழுது?'

'அன்பும் இரக்கமும் சேவையும்தான் உடலை உறுதியாகச் செய்யும் என்று இப்பொழுது அறிகிறேன். அவைதான் சிரஞ்சீவித்துவம் அளிக்கும். நீ சிரஞ்சீவினி! என்னுடைய பிராணனைத் தொட்டு அன்பால் சற்று இளக்கு! அந்தப் பாத்திரத்திலிருக்கும் சுத்த ஜலத்தை உன் கையால் என் மேல் தெளி! பிரேமையற்ற வரட்சி என் அந்திம தாகமாக என்னைத் தகிக்கிறது. உன் கையால் என் வாயில் ஜலம் ஊற்றி என் மரண தாகத்தை நீக்கு! 'சிவ தமோரஸ:' என்று ஞான விருத்தர்கள் வர்ணித்த இந்த ஜலத்தின் மூலம் நமக்கு ஐக்கியம் ஏற்படட்டும்!'

சபரி எழுந்து முற்றத்தில் தான் வந்த அன்று வைத்த துளசியின் அழியாத சந்ததி ஒன்றின் தளங்களைப் பறித்து சுத்த ஜலத்திலிட்டு கரை கடந்த அன்பில் கண்ணீர் பெருக மதங்கரின் உடல் மேல் அதைத் தெளித்து வாயிலும் சிறிது ஊற்றினாள்.

மகரிஷி மெய் சிலிர்த்து, 'சபரி, நீ இந்த ஆசிரமத்தை விட்டு நீங்கித் தனிமையாகச் சென்று வசி! ராமன் பத்தினியுடனும் சகோதரனுடனும் அரண்யத்திற்கு வருகிறார். அவரிடம் உன் பிரேமையைப் பூர்த்தியுடன் காட்டிவிட்டு சிரஞ்சீவித்துவம் பெறுவாயாக!' என்று கண்களை மூடினார்.

அந்தகாரம் எங்கும் சூழ்ந்தது.

சபரி தள்ளாடிக்கொண்டு எழுந்து வெளியே வந்து உதயமாகப் போகும் சந்திர திக்கை நோக்கிப் போனாள்.

•